## என் இருதயத்தை <u>ஒருமுகப்படுத்தும்</u> / <u>unite</u> my heart

Praise the Lord: தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார் என்ற வார்த்தையின்படியே கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து, ஆட்கொள்வாராக. ஆமென்.
இடைவிடாமல், சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபிக்கிற நாம், இந்த இரவு ஜெபக்கூட்டத்திலும், குறிப்பிட்ட ஜெபங்களுக்கு விசுவாசத்தோடும், ஆவியோடும், **<u>ஒரு மனதோடும்</u>** ஜெபிக்க கூடியிருக்கிறோம். ஆமென்.

**<u>சங்கீதம்/Psalms 86:11</u>** (பக்கம் 724)

கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்;
நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி **என் இருதயத்தை <u>ஒருமுகப்படுத்தும்.</u>**

**<u>Let us pray. ..</u>**

நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் **இருதயத்தை <u>ஒருமுகப்படுத்தும்.</u>**
உமது நாமத்தை தொழுதுகொள்வதையே என் வாழ்க்கையின் மிக முக்கியமான காரியமாகக் கொள்ள எனக்கு உதவும். …..என் உள்ளத்தை ஒருமுகப்படுத்தும்…..என் நெஞ்சை நடப்பியும். ஆண்டவரே.

Teach me your way, O LORD, and I will walk in your truth; give me an <u>undivided</u> heart, that I may fear your name. (NIV) …Grant me <u>purity</u> of heart, so that I may honor you. (NLT), ……<u>unite</u> my heart to fear thy name.(KJV)
….. <u>direct and unite my heart</u> [solely, reverently] to fear and honor Your name. (AMP)
….teach me to serve you with complete devotion…(GNB)

<u>நாமத்திற்குப் பயந்திருக்கும்படி:</u> தெய்வீகமான, கர்த்தரை தொழுதுகொள்ளவும் கீழ்ப்படியவும் ஏற்படுகிற பயம். (மதிப்பு)
<u>ஒருமுகப்படுத்தும்</u>: மிக முக்கியமான காரியமாகக் கருதுவது. நமது சிந்தனைகளை பல வழிகளிலே அலையவிடாமல் ஒரே சிந்தனையில் ஆழ்ந்திருக்க பயிற்சிவிப்பது.
<u>Dictionary:</u> ஒருமுகப்படு: (மனம், உணர்வு ஆகியன) ஒன்றில் மட்டுமே நிலைபெறுதல்: (mind, feeling,etc.) get focussed on,

நாம் எல்லோரும் ஒருமனப்பட்டு ஜெபிப்பதற்கு முன்,
நம் ஒவ்வொருவரின் இருதயமும் **<u>ஒருமுகப்பட</u>** வேண்டும்.
ஜெபிப்பவருடைய இருதயமும்,
ஜெபத்தைக்கேட்டு அதற்கு ஆமென் சொல்கிற அனைவருடைய இருதயமும்
ஜெபிக்கிற காரியத்தில் மட்டுமே நிலைத்திருந்து, தேவனிடம் விண்ணப்பித்தால்,
இந்த இடம் அசையும். ஆமென்.

இந்த உலக காரியங்களில்,
நாம் நம்மை அறிந்தோ / அறியாமலோ நம் இருதயத்தை பல நேரங்களில் ஒருமுகப்படுத்துகிறோம்.
நாம் சாப்பிடும்போது, ருசித்து ரசித்து சாப்பிடுவதற்கு, நம் இருதயத்தை ஒருமுகப்படுகிறோம்.
நாம் ஒரு காரியத்தை <u>நமக்காக</u> என்று சாதித்துக்கொள்ள, நம் இருதயத்தை ஒருமுகப்படுகிறோம்.
நிலையில்லாத உலகவாழ்க்கையில், ஈடுபாட்டோடு வாழ்வதே,
நாம் பல காரியங்களில், சூழ்நிலைகளில் நம் இருதயத்தை ஒருமுகப்படுத்துவதால்தான்.
பலர், யோகா போன்ற தியானமுறையினாலே இருதயத்தை, சிந்தனையை ஒருமுகப்படுத்த முயற்சிக்கிறார்கள்.
<u>இவைகள் எல்லாம்</u>, ஒருசில குறிப்பிட்ட நேரம் அவர்கள் இருதயத்தை ஒருமுகப்படுத்தலாம்.
ஒருக்காலும் நிரந்தரமான ஒருமுகப்படுத்துதலை, அதிலும் கர்த்தரது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி இருதயத்தை **<u>நிரந்தரமாக</u>** ஒருமுகப்படுத்தலை, **<u>நாம் நம்முடைய முயற்சியினாலே அடையமுடியாது</u>**.

எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?
The heart is deceitful above all things and **<u>beyond cure</u>**. Who can understand it? (NIV) (Jeremiah 17:9)
என்று வேதம் சொல்லுமானால், இந்த வசனத்துக்கு மாறாக நாம் செயல்படமுடியாது.
கர்த்தரே…இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறார்.
I the LORD search the heart and examine the mind, " (NIV)
கர்த்தரிடம் கேட்டோமானால், அவராலேகூடாத காரியம் எதுவுமில்லை.

கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்;
நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் **இருதயத்தை <u>ஒருமுகப்படுத்தும்.</u>**
*நமது எண்ணங்களும் செயல்களும் தேவனின் மகிமைக்கே இருக்கவேண்டுமென வாஞ்சை நமக்குள் பெருகிக்கொண்டேயிருக்குமென்றால்……இந்த வசனம் நம்மை ஆட்கொள்ளும்.*

கர்த்தருடைய போதனையின்படியே நடப்போம் என்று நாம் உறுதிமொழி எடுத்தாலும்,
அவருடைய நாமத்துக்கு பயந்திருக்கும்படி <u>நம் இருதயம் ஒருமுகப்படவில்லையென்றால்</u>……
நாம் வசனத்தின்படியே நடக்க முயற்சித்தாலும்,
அவர் நாமத்துக்கு மகிமை ஏற்படாத காரியத்தை செய்யவும் நம் இருதயம் இடம் கொடுக்கும்.
நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் **இருதயத்தை <u>ஒருமுகப்படுத்தும்.</u>**

கர்த்தர் நம் இருதயத்தை ஒருமுகப்படுத்தினால்…….அதிலே நாம் நிலைத்திருந்தால்,
கர்த்தருடைய நாமத்தை <u>என்றென்றைக்கும்</u>, <u>எந்த சூழ்நிலையிலும்</u> மகிமைப்படுத்த முடியும்.

*அடுத்த வசனத்தை வாசியுங்கள்:* **<u>சங்கீதம்/psalms 86:12</u>**

என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் **<u>துதித்து</u>**, உமது நாமத்தை **<u>என்றென்றைக்கும்</u>** மகிமைப்படுத்துவேன்.
**<u>I will praise you</u>**, O Lord my God, with all my heart; I will glorify your name **<u>forever</u>**.
*இந்த வசனத்திலே <u>முழு இருதயத்தோடும்</u> என்ற வார்த்தையையும்,*
**<u>என்றென்றைக்கும்</u>** *என்ற வார்த்தையையும் சற்று ஆழ்ந்து தியானித்தோமானால்…….*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை <u>என்றென்றைக்கும்</u> மகிமைப்படுத்துவேன்…..*
நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார்,… (யோவான் 15:8)

தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்பரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல்செய்கிறேன். (பிலி. 1:10)

*கிறிஸ்து கடைசி ஜெபத்திலே ஜெபிக்கிறார்:*
பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். (யோவான் 17:4)

*இப்படியாக நாம் அவரை மகிமைப்படத்தவும், கிரியை செய்யவும் முடியுமா?*
விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. (யாக்கோபு 2:22)

ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக. (1 கொரி. 15:58)

கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்;
என்று நாம் சொல்வதோடு, இந்த ஆலயத்திற்கு அருகிலே நடந்து வரக்கூடிய துாரத்திலே உள்ள அனைத்து தமிழ் மக்களையும் கண்டுகொண்டு. ஆராதனை நேரத்தை அவர்களுக்கு தெரிவிக்கப் போகிறோம்:
அதன்பிறகு நம் போதகரோடு அல்லது உதவிபோதகரோடு சென்று அவர்களுக்கு மேலும் சுவிசேஷம் சொல்லப்போகிறோம்……இந்த கோடை காலத்திலே இதை உற்சாகத்தோடு கர்த்தருக்குள் முயற்சி செய்வோம் என்று ஒரு உறுதிமொழி எடுங்கள்.

இதற்காக நாம் எல்லோரும் <u>ஒருமனப்பட்டு</u> ஜெபிக்க வேண்டுமானால்,
அதற்கு முன், நம் ஒவ்வொருவரின் இருதயமும் <u>ஒருமுகப்பட</u> வேண்டும்.
***நமக்கே 2 மனம் இருந்தால் நம் அனைவரின் மனமும் எப்படி ஒருமனமாகும்??***

அப்போஸ்தலர் அதிகாரத்தில்….
பேதுருவும் யோவானும் கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கம் செய்வதையும் கிறிஸ்துவின் மூலம் அதிசயம் அற்புதங்களை செய்வதையும் தடுக்க, இவர்களுக்கு எதிராக ஆசாரியர்களும் மூப்பர்களும் கூட்டங்கூடினார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தைப் பிரசங்கிக்கக்கூடாது என்று அவர்களை கண்டித்து பயமுறுத்தி அனுப்பினார்கள்.

அப்பொழுது இந்தகாரியத்தை கேள்விப்பட்ட கிறிஸ்துவின் விசுவாசிகள், ஒன்றுகூடி **<u>ஒருமனப்பட்டு</u>**, தேவனை நோக்கி சத்தமிட்டு ஜெபிக்கிறார்கள்….. அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். (அப். 4:..31)
*அந்த அதிகாரத்திலே இன்னுமொரு வசனம் சொல்லப்பட்டிருக்கிறது.*
விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்.
All the believers were one in heart and mind (அப் 4:32)
*இந்த வார்த்தையை நம் இருதயத்திலே இருத்தி அசைபோட்டுப்பாருங்கள்…..*
*மீண்டுமாக* **<u>சங்கீதம்/psalms 86:11-12</u>** *மீண்டுமாக இன்னொருவர்…………மீண்டுமாக இன்னொருவர்………*

நாங்கள் முழு இருதயத்தோடும் **<u>துதித்து</u>**, உமது நாமத்தை **<u>என்றென்றைக்கும்</u>** மகிமைப்படுத்த, நாங்கள் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி, எங்கள் **<u>இருதயத்தை</u> <u>ஒருமுகப்படுத்தும்</u> ஆண்டவரே** என விண்ணப்பம் செய்ய தயவுசெய்து எழுந்து நிற்போம்.

## <u>Let us Pray</u>

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.